தினமணி

கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு 3 சதவீத வட்டியில் கடன்:முதல்வர் அறிவிப்பு

First Published : 06 Mar 2010 12:53:11 AM IST

பெங்களூர், மார்ச் 5: கடனை சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு 3 சதவீத வட்டியில் மானியக் கடன் வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் முதல்வர் அறிவித்தார்.

÷மானியக் கடன் திட்டத்துக்கு ரூ.120 கோடி ஒதுக்கப்படுகிறது.

÷சுமார் 2 லட்சம் தண்ணீரை சேமிக்கும் அணைக் கட்டுகள் (செக்டேம்) கட்ட ரூ.500 கோடி செலவிடப்படும். இதற்காக ஜலசிரி இயக்கம் துவக்கப்படும். ஒவ்வொரு கிராமங்களிலும் செக்டேம் கட்டுவதற்கு வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தின்கீழ் மானியமும், சிறப்பு உதவியும் வழங்கப்படும். நல்ல முறையில் அணைக்கட்டு கட்டும் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு ரூ.5 லட்சம் வெகுமதி வழங்கப்படும்.

÷நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்கில் தெளிப்பு நீர் பாசனத்தை கட்டாயமாக்க அரசு திட்டமிட்டு வருகிறது. விவசாயிகளுக்கு உதவவும், தொழில்நுட்ப வசதிகளை அளிக்கவும் ரூ.100 கோடியில் அன்தரகங்கா மைக்ரோ பாசன கார்ப்பரேஷன் அமைக்கப்படும். விவசாய பம்புசெட்களுக்கு மின்சார விநியோகம் செய்யவும், பாக்கியஜோதி-குதிர்யஜோதி திட்டங்களுக்கும் சுமார் ரூ.2500 கோடி ஒதுக்கப்படும்.

÷விவசாயிகளுக்கு போதுமான அளவு உரம் விநியோகிக்க கர்நாடக கூட்டுறவு சந்தை கூட்டமைப்புக்கு ரூ.400 கோடி வழங்கப்படும். ஷிமோகாவில் புதிதாக வேளாண் பல்கலைக்கழகம் அமைக்கப்படும். மலைநாடு பகுதியில் உள்ள அரிய தாவரங்கள், பயிர் வகைகளை ஆராய ரூ.10 கோடி ஒதுக்கப்படும். மரங்களில் இருந்து தவறி விழுந்து இறக்கும் அல்லது பாம்புக்கடியால் இறக்கும் விவசாயிகள் மற்றும் விவசாய கூலி தொழிலாளியின் குடும்பத்துக்கு ரூ.1 லட்சம் உதவித் தொகை வழங்கப்படும்.

÷பயிர் மற்றும் தீவன, வைக்கோல் இழப்பு ஏற்பட்டால் ரூ.10 ஆயிரம் இழப்பீடு வழங்கப்படும். பூசேதனா திட்டத்தின்கீழ் 6 மாவட்டங்களில் மண் தர சோதனை நடத்தி, பயிரிட்டு உற்பத்தி அதிகரிக்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் மேலும் 15 மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்படும். அதற்காக ரூ.15 கோடி ஒதுக்கப்படும். மாவட்ட அளவில் சூப்பர் ஸ்டோர்கள் திறக்க விவசாயிகளுக்கு நிதி உதவி செய்யப்படும். இரண்டு லட்சம் ஹெக்டேர் நிலத்தில் தோட்டக்கலைப் பயிர்களை

வளர்க்க ரூ.500 கோடி ஒதுக்கப்படும். மாம்பழ உற்பத்திக்கு கர்நாடக மேங்கோ வாரியம் ரூ.10 கோடியில் அமைக்கப்படும்.

÷மைசூர், ஹிரியூர், சிர்சி, கொப்பல் நகரங்களில் தோட்டக்கலைக் கல்லூரிகள் துவங்க தலா ரூ.5 கோடி ஒதுக்கப்படும். பழம், காய்கனி பதப்படுத்தும் மையங்கள் அமைக்க ரூ.10 கோடி வழங்கப்படும். சுமார் 7 ஆயிரம் பட்டு நெசவாளர் குடும்பங்களுக்கு 3 சதவீத வட்டியில் மானியக் கடன் வழங்கப்படும்.

÷பால் உற்பத்தியாளருக்கு லிட்டருக்கு ரூ.2 சிறப்பு மானியம் வழங்கும் திட்டம் நீட்டிக்கப்படும். ஷிமோகா, ஹாசன் கால்நடைக் கல்லூரிகள் மேம்பாட்டுக்கு ரூ.10 கோடி ஒதுக்கப்படும். மீனவர்கள் மேம்பாட்டுக்கு ரூ.2.5 கோடியும், கொடேரி, பைந்தூரில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க ரூ.10 கோடியும் ஒதுக்கப்படும்.

÷யசஸ்வினி திட்டத்தின்கீழ் இதய நோய் உள்ளிட்ட கடுமையான நோய்களுக்கு விவசாயிகள் சிகிச்சை பெற ரூ.40 கோடி ஒதுக்கப்படும். கங்காவதி தாலுகா கரடகியில் அதிநவீன அரிசி தொழில்நுட்பப் பூங்கா அமைக்க ரூ.10 கோடி ஒதுக்கப்படும்.

÷அரசுக்குச் சொந்தமான மைசூர் சர்க்கரை ஆலையை மேம்படுத்த ரூ.20 கோடி ஒதுக்கப்படும். பெல்காமில் உள்ள கர்நாடக சர்க்கரை இன்ஸ்டிடியூட் மேம்படுத்தப்படும். தானியம், பழங்கள், காய்கனிகளை பதப்படுத்தும் ஆலைகளை அமைக்க ரூ.10 கோடி ஒதுக்கப்படும். சுவர்ண கிராமோதயா திட்டத்தின்கீழ் கிராமங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக

ரூ.1000 கோடியும், தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின்கீழ் கிராமங்களை மேம்படுத்த ரூ.3 ஆயிரம் கோடியும், ஊரகப் பகுதிகளுக்கு குடிநீர் சப்ளை செய்ய ரூ.1000 கோடியும் ஒதுக்கப்படும். பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்த ரூ.2580 கோடியும், எம்.எல்.ஏ.க்களின் தொகுதி மேம்பாட்டுக்கு ரூ.300 கோடி.

**ஒசூரை வேளாண் சிறப்பு பொருளாதார மண்டலமாக அறிவிக்க விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

First Published : 06 Mar 2010 06:28:49 AM IST

ஒசூர், மார்ச் 5:ஒசூரை வேளாண் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

ஒசூர் அருகேயுள்ள பைரமங்கலம், அக்கொண்டப்பள்ளி, குந்துராமனப்பள்ளி, ஒன்னல்வாடி உள்ளிட்ட 5 ஊராட்சிகளில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க மத்திய அரசு கடந்த 2007-ம் ஆண்டு உத்தரவிட்டது.

வாகனத் தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும் என மத்திய அரசு உத்தரவிட்டது. இதையடுத்து 2008-ல் தமிழக டிட்கோ நிறுவனமும், ஆந்திரத்தின் ஜி.எம்.ஆர். நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்நிலையில், விவசாய நிலங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்க பாமக, இடதுசாரி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. அதையடுத்து இத்திட்டத்தில் தமிழக அரசு ஆர்வம் காட்டவில்லை.

இப்பகுதியில் காய்கறிகள் அதிகம் பயிரிடப்படுகின்றன. கேரட், பீன்ஸ், முட்டைகோஸ், குடை மிளகாய், காலிஃப்ளவர், உருளைக் கிழங்கு, கொததமள்ளி, புதினா போன்ற கீரை வகைகள் சுமார் 8 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிர் செய்யப்படுகின்றன.

இவை ஒசூரில் இருந்து தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கு, குறிப்பாக கோயம்பேடு, கோவை, மதுரை திருச்சி மற்றும் பிற மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஒசூரில் ரோஜா மலர்கள் சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. பேரிகை, பாகலூர், தளி, தேன்கனிக்கோட்டை உள்ளிட்டப் பகுதிகளில் பசுமைக்குடில் அமைத்து ரோஜா மலர்கள் உற்பத்தி செய்து ஐரோப்பா, சவுதி அரேபியா, அமெரிக்கா, போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

இதைக் கருத்தில்கொண்டு மத்திய, மாநில அரசுகள் ஒசூரை வேளாண் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு தடையற்ற இலவச மின்சாரம், விவசாயப் பொருள்கள் கெடாமல் பாதுகாக்க குளிர் பதனக் கிடங்கு உள்ளிட்ட வசதிகளை செய்ய வேண்டும் என விவசாய சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.லகுமையா கேட்டுக் கொண்டுள்ளார்.

**விவசாய நுகர்வோருக்கான விழிப்புணர்வு பயிற்சி முகாம்**

First Published : 06 Mar 2010 02:04:20 AM IST

நீடாமங்கலம், மார்ச் 5: திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த நுகர்வோருக்கான விழிப்புணர்வுப் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

பயிற்சிக்கு தலைமை வகித்து, மாவட்ட வருவாய் அலுவலர் அ. ஜான்லூயிஸ் பேசும்போது, நுகர்வோரின் கடமைகள், உரிமைகள் விவசாயிகளுக்கு எந்த முறையில் பயனுள்ளவையாக இருக்கின்றன என்பதை, அனைத்து விவசாயக் குழுக்கள், மற்றும் விவசாயிகள் அறிந்துகொள்ள ஏதுவாக உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையினரால் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

விவசாயிகள் விதைகள் உள்ளிட்ட விவசாய பொருள்கள் வாங்கும்போதே அதற்குரிய ரசீதையும் கேட்டு பெற வேண்டும் என்றார் அவர்.

பயிற்சியை நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் தி. செங்குட்டுவன் தொடங்கிவைத்து பேசினார்.

திருவாரூர் மாவட்ட வழங்கல் அலுவலர் முகமது பாதுஷா மற்றும் மன்னார்குடி, நீடாமங்கலம் மற்றும் வலங்கைமான் வட்டார விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

திருவாரூர் வேளாண் அலுவலர்கள் ஆ. உத்திராபதி, ப. கணேசன், திருத்துறைப்பூண்டி நுகர்வோர் பாதுகாப்பு மைய நிர்வாக செயலர் ஆர். ஜெயராமன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் பாலகிருஷ்ணன், வட்ட வழங்கல் அலுவலர் பழனிவேலு, உதவியாளர்கள் ரத்தினவேல், ராமச்சந்திரன் ஆகியோர் செய்திருந்தனர்.

### நீர், நிலவளத் திட்டத்தில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி

First Published : 06 Mar 2010 02:48:37 AM IST

கோவில்பட்டி, மார்ச் 5: கோவில்பட்டி வட்டாரம், புதுஅப்பனேரி கிராமத்தில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை சார்பில் உப்பத்தூர் ஆறு உபவடிநிலப் பகுதியின் நீர்வள மற்றும் நிலவளத் திட்டத்தில் விவசாயிகளுக்கு அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு சித்திரம்பட்டி விளைபொருள் உற்பத்தியாளர் குழு தலைவர் வையாபுரி தலைமை வகித்தார். தூத்துக்குடி வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) முருகானந்தம் பேசுகையில், விளைபொருள் உற்பத்தியாளர் குழு மூலம் அறுவடை செய்யப்பட்ட விளைபொருளை அதிக அளவில் ஒருங்கிணைத்து, கொள்முதலீட்டாளர்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்து அதிக லாபம் பெறும்படி கேட்டுக் கொண்டார்.

மேலும், அறுவடை செய்துள்ள விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் வரை கோவில்பட்டி ஒழுங்குமுறை விற்பனை கூட சேமிப்பு கிடங்கினை பயன்படுத்தும்படி அறிவுறுத்தினார்.

கத்தரி, வெண்டை மற்றும் மிளகாய் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வீரிய ஒட்டுரக காய்கறி விதைகள் மற்றும் பழ மரச் செடிகள் வழங்குவது பற்றி கோவில்பட்டி தோட்டக் கலை உதவி இயக்குநர் ராஜாகுமார் எடுத்துரைத்தார்.

வேளாண் பொறியியல் துறை இளநிலை பொறியாளர் சேதுராமன் பேசினார். வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ஆனந்தராஜ் நெல், மக்காச்சோளம், உளுந்து சாகுபடி செய்வது பற்றிய தொழில்நுட்பங்களையும், ஆராய்ச்சி நிலைய பூமிராஜ் நெல், மக்காச்சோளம் விளைபொருள்களை அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்பங்கள் பற்றியும் கூறினார்.

கோவில்பட்டி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) பாண்டியன் வரவேற்றார். ஓட்டப்பிடாரம் வேளாண்மை உதவி அலுவலர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

### குரும்பூரில் நெல் கொள்முதல் நிலையம் திறப்பு

First Published : 06 Mar 2010 02:47:14 AM IST

ஸ்ரீவைகுண்டம்,மார்ச் 5: குரும்பூரில் நெல் கொள்முதல் நிலையத்தை அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ. திறந்துவைத்து முதல் விற்பனையை துவக்கிவைத்தார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் தமிழக அரசின் நேரடி கொள்முதல் நிலைய திறப்பு விழா குரும்பூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு அனிதாஆர்.ராதாகிருஷ்ணன் தலைமை வகித்து நெல் கொள்முதல் நிலையத்தை திறந்துவைத்து முதல் விற்பனையை துவக்கிவைத்துப் பேசினார்.

கடம்பாகுளம் பாசன விவசாய சங்கத் தலைவர் டி.டி.குணா, அங்கமங்கலம் ஊராட்சித் தலைவர் டே.ஜான், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் வித்யாசாகர், அழகப்பபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் முருகேசன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் குரும்பூர் நகர திமுக செயலர் விஜயபெருமாள், விவசாய சங்கத் தலைவர்கள் எட்வர்ட், ஆறுமுகம், கல்யாணசுந்தரம், நாசரேத் பேருராட்சித் தலைவர் சா.மாமல்லன், கானம் பேருராட்சித் தலைவர் செந்தமிழ்சேகர், குருகாட்டுர் ஊராட்சி மன்றத் தலைவர் பூலான், திருச்செந்தூர் நகர திமுக செயலர் கோபால், சதீஷ், ஏ.பி.ரமேஷ், நல்லூர் முத்துப்பாண்டியன், பாலம் ராஜன், கதிரவன், நயினார் பாண்டியன், வேல் ராமகிருஷ்ணன், காசியானந்தம், கனகலிங்கம், இளங்கோ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் பிரகாஷ்பாபு வரவேற்றார்.

## 10-ல் வெள்ளாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி

First Published : 06 Mar 2010 01:09:53 AM IST

காஞ்சிபுரம், மார்ச் 5: வெள்ளாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி இம்மாதம் 10-ம் தேதி ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில் நடைபெறுகிறது.

÷இது குறித்து உழவர் பயிற்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் ம.ந.சுந்தரராமன் வெளியிட்ட அறிக்கை:

÷வெள்ளாடு வளர்ப்பது மற்ற கால்நடைகளை வளர்ப்பதைக் காட்டிலும் லாபகரமான தொழில். ஆடு வளர்ப்பின் மூலம் நமக்கு இறைச்சி, பால் மற்றும் எரு முதலியவை கிடைக்கின்றன. வெள்ளாடுகள் எல்லா தட்பவெப்ப நிலையிலும், எல்லா நிலங்களிலும் வளர்ந்து விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் தன்மையுடையவை.

÷இந்திய நாட்டின் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கும், வறுமைக் கோட்டுக்குகீழ் இருக்கும் மக்களுக்கும் வெள்ளாடு வளர்ப்பு ஒரு நிரந்தர வருவாய் கொடுக்கும் தொழிலாகும்.

÷எனவே வெள்ளாடு வளர்ப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சியை இம்மாதம் 10-ம் தேதியன்று காஞ்சிபுரம் மாவட்டம், ஏனாத்தூரில் அமைந்துள்ள உழவர் பயிற்சி மையத்தில் அளிக்கப்படுகிறது.

பயிற்சியில் பங்கு பெற ஆர்வம் உள்ள ஆண், பெண் மற்றும் உழவர் பெருமக்கள் நேரிடையாகவோ, அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொண்டு தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

÷தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: பேராசிரியர் மற்றும் தலைவர், உழவர் பயிற்சி மையம், ஏனாத்தூர், காஞ்சிபுரம்-631 561. தொலைபேசி எண்: 044-27264019.

## வெண்டையில் நோயை தடுக்க ஆலோசனைகள்

First Published : 06 Mar 2010 01:06:24 AM IST

காஞ்சிபுரம், மார்ச் 5: வெண்டை பயிரிடும் விவசாயிகள் வெண்டை விதைகளை ஆரம்பிக்கும்போதே இயற்கை வேளாண்மை மற்றும் அங்கக வேளாண்மை முறைகளை பின்பற்றினால் அதற்கு வரும் நோய்களை தடுக்கலாம் என்று தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

÷இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம்: காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் வெண்டைப் பயிர் ஆண்டு முழுவதும் பயிரிடப்பட்டு வருகிறது.

÷வெண்டையில் கோ-3, பர்பானிக், கிராந்தி, அர்க்கா அனாமிக்கா போன்ற உயர் விளைச்சல் ரகங்களும், வீரிய ரக எண்கள் 10, 7109, 55, 64, 7356 ஸ்லெண்டர், சோனல் போன்றவையும் இம் மாவட்டத்தில் பரவலாக பயிரிடப்பட்டு வருகின்றன.

÷வெண்டையில் மஞ்சள் தேமல் என்றும் நச்சுயிரி நோய் அதிக அளவில் காணப்படும். இவ் வகையான நச்சுரியி நோய் வெள்ளை ஈ எனப்படும் சாறு உறிஞ்சும் பூச்சிகள் மூலமே பரவுகின்றன.

÷நோய் பாதிக்கப்பட்ட செடிகளின் இலைகள் மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடனும், இலை மற்றும் காம்புகளின் நரம்புகள் மஞ்சள் நிறமாகவும், பின்னர் காய்கள் வெள்ளை நிறமாகவும் மாறுகின்றன.

÷இதனால் செடிகளின் வளர்ச்சி குன்றி மகசூல் பாதிக்கப்படும். காய் வெள்ளை நிறம் அடைவதால் வியாபாரத்துக்கு ஏற்றதாக இருக்காது. இதனால் பொருளாதார இழப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

÷எனவே வெண்டை பயிரிடும் விவசாயிகள் வெண்டை விதைகளை விதைக்க ஆரம்பிக்கும்போதே இயற்கை வேளாண்மை அங்கக வேளாண்மை முறைகளை பின்பற்றினால் இந் நோய் தாக்குதலை தடுக்கலாம்.

÷கடைசி உழவின்போது ஏக்கருக்கு 10 டன் தொழு எரு, 100 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 4 கிலோ அசோஸ்பைரில்லம், 4 கிலோ பாஸ்போ பேக்ட்ரியா, 2 கிலோ சூடோமோனஸ் ப்ளூரோசன்ஸ், 2 கிலோ பெவேரியா பெசியானா என்ற பேக்டரிய உயிரியல் பூச்சிக் கொள்ளியுடன் கலந்து இட வேண்டும்.

÷விதைகள் நட்ட 15-ம் நாள் 0.03 சதவீதம் அசாடிராக்டின் என்ற வேம்பு கலந்த பூச்சிக் கொல்லியை தேவையான அளவு ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளிக்க வேண்டும்.

÷பிறகு 15 நாள்கள் இடைவெளியில் 0.2 சதவீதம் பேவேரியா பெசியானா என்கின்ற பேக்டீரிய உயிரியல் பூச்சிக் கொல்லியை இரண்டு முறை தெளிக்க வேண்டும். ஓரிரு செடிகளில் நோயின் தாக்குதல் காணப்பட்டால் உடனே அந்தச் செடிகளை வேருடன் பறித்து அழித்து விட வேண்டும்.

÷ஒரு சதவீதம் வேப்பம் பிண்ணாக்கு கரைசலை விதைகள் நட்ட 45-ம் நாள் ஒரு முறையும், பிறகு 7 நாள்கள் இடைவெளியில் இரண்டு முறையும் தெளிக்க வேண்டும். ÷பைரித்ராய்டு போன்ற செயற்கை ரசாயனப் பூச்சிக் கொல்லிகளை எக்காரணம் கொண்டும் தெளிக்கக் கூடாது. இம் மருந்துகளை தேவையில்லாமல் தெளிப்பதால், நன்மை செய்யும் பூச்சிகள் அழிக்கப்படுவதோடு, வெள்ளை ஈக்களுக்கு எதிர்ப்புத் தன்மை உருவாகும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது என்றார்.

## கோவை மாவட்டத்தில் தேவைக்கு மேல் உரம் கையிருப்பு

First Published : 06 Mar 2010 02:28:37 AM IST

கோவை, மார்ச் 5: கோவை மாவட்டத்தில் தேவைக்கு மேல் உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக, வேளாண் இணை இயக்குநர் வை.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

கோவை மாவட்டத்தில் தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் 3 ஆயிரத்து 450 மெட்ரிக் டன் யூரியா, 450 மெட்ரிக் டன் டிஏபி, 3 ஆயிரத்து 450 மெட்ரிக் டன் பொட்டாஷ், 250 மெட்ரிக் டன் சூப்பர் பாஸ்பேட், 3 ஆயிரத்து 525 மெட்ரிக் டன் காம்பளக்ஸ் உரங்கள் இருப்பில் உள்ளன.

ஆகவே, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்களை, தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் பெற்று பயன்பெறலாம். உரம் வாங்கும்போது விற்பனை ரசீது கேட்டுப் பெற வேண்டும்.

விற்பனை ரசீது கொடுக்க மறுத்தாலோ, அரசு நிர்ணயம் செய்துள்ள அதிகபட்ச விற்பனை விலைக்கு மேல் விற்பனை செய்தாலோ புகார் தெரிவிக்கலாம். தொலைபேசி எண்: 0422} 243 2739.

## விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தை பின்பற்ற வேண்டும்

First Published : 06 Mar 2010 02:41:07 AM IST

மேலூர்,மார்ச் 5: மாறிவரும் பருவநிலைக்கு ஏற்ப விவசாயிகள் நவீன வேளாண் தொழில்நுட்ப முறைகளைத் தெரிந்துகொண்டு விவசாயம் செய்தால், அதிக மகசூல் பெறுவதுடன், அதிக லாபமும் ஈட்ட முடியும் என தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பா. முருகேசபூபதி பேசினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், வேளாண் அறிவியல் நிலையம் ஆகியவை ஏற்பாடு செய்திருந்த நவீன தொழில்நுட்ப வார விழாவில் அவர் பேசியதாவது:

இது தமிழ்நாட்டில் நடத்தப்படும் 7}வது தொழில்நுட்ப வார விழாவாகும். இதில், விவசாயிகள் குறிப்பாக பெண்கள் அதிக அளவில் கலந்துகொண்டுள்ளது வரவேற்கத்தக்கது.

மாறிவரும் பருவநிலை, விவசாய சாகுபடி பரப்பு குறைந்து வருவது, வேலைக்குப் போதிய ஆள்கள் கிடைக்காமை போன்றவற்றைக் கருத்தில்கொண்டு, விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தைத் தெரிந்துகொண்டு அதைச் செயல்படுத்த முன்வரவேண்டும்.

செம்மை நெல் சாகுபடி செய்ய விவசாயிகள் முன்பு தயக்கம் காட்டி வந்தனர். ஆனால், அதில் அதிக மகசூல் கிடைப்பதை அடுத்து, இப்போது அதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று சொல்லவில்லை. இயற்கை உரங்களுடன், ரசாயன உரங்களையும் சேர்த்து போட்டால் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

விவசாயிகளுக்கு வேளாண் ஆராய்ச்சி மையங்கள் மூலம் தகவல்களும், பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இதை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக மண்டல திட்ட இயக்குநர் ச.பிரபுகுமார் பேசுகையில், தமிழ்நாட்டில் வேளாண் அறிவியல் மையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரை 30 மாவட்டங்களில் 15}ல் வேளாண் அறிவியல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோல் வேளாண் தொழில்நுட்ப பூங்காக்கள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் ரூ. 14 லட்சத்தில் மண் தர நிர்ணய சோதனை ஆய்வு மையம் அமைக்கப்பட உள்ளது என்றார்.

இவ்விழாவில் வேளாண் விற்பனை வாரியத் தலைவர் கே.பி.டி. கணேசன், மதுரை மாநகராட்சி துணைமேயர் பி.எம். மன்னன், வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநர் பா. கலைச்செல்வன், மதுரை மனையியல் கல்லூரி முதல்வர் ப.பானுமதி, இணை வேளாண் இயக்குநர் பா.சங்கரலிங்கம், கொடிக்குளம் ஊராட்சித் தலைவர் சந்தான லட்சுமி பாபு உள்ளிட்டோர் பேசினர்.

தொழில்நுட்ப வாரவிழாவையொட்டி நடைபெற்ற கண்காட்சியை துணைவேந்தர் முருகேசபூபதி திறந்துவைத்தார். விழாவில் விவசாயிகளுக்கு பயனளிக்கும் கையேடுகள் வெளியிடப்பட்டன.

விவசாயப் பிரதிநிதிகள் உசிலம்பட்டி மருதநாயகம், ஜெயராமன் ஆகியோர் தங்களது அனுபவங்களை விவரித்தனர். சிறப்பாக சாகுபடி செய்த விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர்.

முன்னதாக, வேளாண் கல்லூரி முதல்வர் க.வைரவன் வரவேற்றார். திட்ட ஒருங்கிணைப்பாளர் சு. குமார் நன்றி கூறினார்.

## பெரம்பலூரில் புதிய நெல் கொள்முதல் நிலையம்

First Published : 06 Mar 2010 02:16:40 AM IST

பெரம்பலூர், மார்ச் 5: பெரம்பலூரில் புதிய நேரடி கொள்முதல் நிலையத்தை மாவட்ட ஆட்சியர் எம்.விஜயகுமார் வெள்ளிக்கிழமை தொடக்கிவைத்தார்.

கடந்த வாரம் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பெரம்பலூர், ஒகளூர் மற்றும் வி.களத்தூர் ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும் என விவசாய சங்கத்தினர் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், பெரம்பலூரில் கொள்முதல் நிலையம் அமைக்க மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார்.

அதனடிப்படையில், பெரம்பலூரில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலக வளாகத்தில் புதிய நேரடி கொள்முதல் நிலையத்தை மாவட்ட ஆட்சியர் எம்.விஜயகுமார் வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சு.பழனிசாமி, வருவாய்க் கோட்டாட்சியர் ச.பாலுசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் வில்லியம் தாமஸ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கி.கண்ணதாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தாளவாடி கூட்டுறவு சங்கத்தில் ரூ.25 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

First Published : 06 Mar 2010 12:42:02 AM IST

சத்தியமங்கலம்,மார்ச் 5: தாளவாடி கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்ற ஏல விற்பனையில் ரூ.25 லட்சத்துக்கு விரளி மற்றும் கிழங்கு மஞ்சள் விற்கப்பட்டது.

சத்தியமங்கலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் தாளவாடி கிளையில் மஞ்சள் ஏலம் கடந்த 17-ம் தேதி முதல் நடந்து வருகிறது. மஞ்சள் ஏல விற்பனையில் ஈரோடு, கோவை மற்றும் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து முன்னணி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தாளவாடி மலைக் கிராமங்களில் இருந்து 400 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. விரளி மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.9 ஆயிரத்து 840 முதல் ரூ.10 ஆயிரத்து 179 வரையிலும், கிழங்கு மஞ்சள் ரூ.9 ஆயிரத்து 292 முதல் ரூ.9 ஆயிரத்து 486 வரையும் ஏல விற்பனையானது.

இது குறித்து சங்க தனிஅலுவலர் கா.சுப்பிரமணியம் வெள்ளிக்கிழமை கூறியது:

ஈரோடு மார்க்கெட் விலை தாளவாடி கிளையிலும் கிடைப்பதால் 400 மூட்டைகள் மொத்தமாக ரூ.25 லட்சத்துக்கு விற்பனையானது. வரும் புதன்கிழமை நடைபெறும் ஏலத்தில் 600 மூட்டைகள் கொண்டு வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏலம் முடிந்ததவுடன் பணம் உடனடியாக பட்டுவாடா செய்யப்படுகிறது. விவசாயிகள் கொண்டுவரும் மஞ்சளை பாதுகாப்பாக வைப்பதற்கு குடோன் வசதி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகள் ரூ.2 லட்சம் வரை சரக்கீட்டுக் கடன் பெறும் வசதியும் உள்ளது என்றார்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 74.44 அடி

First Published : 06 Mar 2010 02:19:28 AM IST

தஞ்சாவூர், மார்ச் 5: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 74.44 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,540 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 1,900 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### விவசாயிகளுக்கு பயிற்சி

First Published : 06 Mar 2010 12:55:54 AM IST

திண்டிவனம், மார்ச் 5: திண்டிவனத்தை அடுத்த கீழ்கூடலூர் ஊராட்சியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம் சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.

விதை கிராம திட்டத்தின் கீழ் நடைபெற்ற பயிற்சி முகாமில், விவசாயிகள் தங்களுக்கு தேவையான விதைகள் தாங்களே தங்கள் நிலத்தில் இருந்து உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

உளுந்து, பச்சைபயிறு உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்வது குறித்து திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலயைத்தின் விதை அறிவியல் துறை உதவி பேராசிரியர் நடராஜன் பயிற்சி அளித்தார்.

**பரங்கிக்காய் விலை வீழ்ச்சி**

First Published : 06 Mar 2010 12:00:00 AM IST



பண்ருட்டி, மார்ச் 5: பண்ருட்டி அருகே நிலத்தில் விளைந்துள்ள பரங்கிக்காய்களை வாங்க வியாபாரிகள் வராததால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

பண்ருட்டி மற்றும் அண்ணா கிராமம் ஒன்றியப் பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் கத்திரி, வெண்டை, முள்ளங்கி, பாகல், புடலை, முருங்கை, பூசணி, பரங்கிக்காய், முட்டைகோஸ், காளிஃபிளவர் உள்ளிட்டவற்றை பயிர் செய்து வருகின்றனர்.

சிறுவத்தூர், வையாபுரிப்பட்டிணம், கட்டியாம்பாளையம், அம்மாபேட்டை, புதுப்பேட்டை, பண்டரக்கோட்டை, ஒறையூர், சின்னப்பேட்டை உள்ளிட்ட பகுதியில் சுமார் 50 ஏக்கர் நிலப் பரப்பளவில் பரங்கிக்காய் பயிர் செய்திருந்தனர். பரங்கிக்காய் விளைச்சல் அதிகரித்திருந்ததால் விலை வீழ்ச்சி ஏற்பட்டு கடந்த ஜனவரி மாதம் ஒரு கிலோ ரூ.2 முதல் 2.50 வரை விற்பனையானது. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்தனர். இந்நிலையில் தற்போது பரங்கிக்காய்களை வாங்க வியாபாரிகள் வராததால் தோட்டத்தில் விளைந்த காய்கள் அப்படியே கிடக்கின்றன.

இது குறித்து வையாபுரிபட்டிணத்தை சேர்ந்த விவசாயி கணேசன் கூறியது: பரங்கிக்காய் நான்கு மாதப்பயிர். இந்த ஆண்டு விளைச்சல் அதிகரித்துள்ளதாலும், பருவம் தவறி காய்த்துள்ளதாலும், விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்போது ஒரு கிலோ ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

அப்படி விற்றாலும் பரங்கிக்காய்களை வாங்க வியாபாரிகள் யாரும் முன்வரவில்லை. மேலும், பராமரிப்பு செய்த செலவுக்கு கூட காய் விற்கவில்லை என்றார்.

**வாழைப் பயிரில் நோய் தாக்குதல்: விவசாயிகள் கவலை**

First Published : 06 Mar 2010 12:00:00 AM IST



**குறிஞ்சிப்பாடி அருகே வெங்கடாம்பேட்டை ஆறுமுகம் வாழைத் தோட்டத்தில் தண்டுப் பகுதியில் செவ்வழுகல் நோய் பாதித்த வாழை மரங்கள்.**

கடலூர், மார்ச் 5: கடலூர் மாவட்டத்தில் வாழைப் பயிரில் தண்டுப் பகுதியில் செவ்வழுகல் (வாடல்) நோய் தாக்குதல் காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்து உள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் வாழை பயிரிடும் விவசாயிகள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு சுமார் 12 ஆயிரம் ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டு உள்ளது. ÷இந்த மாவட்டத்தில் வாழை சாகுபடி ஜூன், ஜூலை மாதங்களில் தொடங்கி, செப்டம்பர் மாதத்தில் அறுவடைக்கு வருகிறது.

வாழை விவசாயத்தில் நல்ல விலை கிடைக்கும் ஆண்டுகளில், ஏக்கருக்கு விவசாயிகளுக்கு செலவு போக ரூ. 1 லட்சம் லாபம் கிடைக்கிறது.

கோடை காலத்தில் காற்று இல்லாமல் இருந்தால் வாழை விவசாயம் சிறப்பாக அமையும் என்கிறார்கள் கடலூர் விவசாயிகள்.

கடலூர் மாவட்டத்தில் தற்போது பூவன், செவ்வாழை, ஏலக்கி, மொந்தன் ஆகிய ரகங்கள் பயிரிடப்பட்டு உள்ளன.

கடலூர் மாவட்டத்தில் பொதுவாக வாழைப் பயிரில் நோய் தாக்குதல் பெரும்பாலும் இருக்காது.

எனினும் இந்த ஆண்டு வாழையில் தண்டுப் பகுதியில் செவ்வழுகல் (வாடல்) நோய் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

ராமாபுரம், புதூர், வழிசோதனைப் பாளையம் உள்ளிட்ட பல பகுதிகளில் இந்த நோய் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இது குறித்து விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் கடலூர் மாவட்ட அமைப்பாளர் ரவீந்திரன் கூறுகையில், தற்போது ஏற்பட்டு இருக்கும் வாடல் நோய் காரணமாக வாழைப் பயிரில் மலட்டுத் தன்மை ஏற்பட்டுவிடும்.÷தற்போது 4 மாதப் பயிராக உள்ளது வாழை. இனிமேல் அந்தக் கட்டைகளை அகற்றிவிட்டு புதிய கட்டைகள்தான் பயிரிட வேண்டும். அது விவசாயிகளுக்கு முடியாத காரியம்.

வாழைப் பயிருக்கு இன்சூரன்ஸ் தொகை ஏக்கருக்கு ரூ. 54 ஆயிரம். இது மிகவும் அதிகமாக இருப்பதால் பலர் காப்பீடு செய்வதில்லை. பயிர்க் காப்பீடு செய்தாலும், காற்றில் வாழை சாய்ந்தால்தான் இழப்பீடு தருவார்கள்.

எனவே பயிர் காப்பீட்டுத் திட்டத்தால் வாழை விவசாயிகளுக்குப் பயன் இல்லை. எனவே பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்றார்.

இது குறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் முகமது யெகாயாவிடம் கேட்டதற்கு அவர் கூறியது:

இந்த ஆண்டு வாழைப் பயிரில் நோய் தாக்குதல் இருப்பதாக விவசாயிகள் பலர் புகார் தெரிவித்தனர்.

விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் பல்கலைக் கழக பேராசிரியர்களை அழைத்து வந்து காண்பித்தோம். அவர்கள் சாம்பிள் எடுத்துச் சென்று உள்ளர்.

வெளி மாவட்டங்களில் இருந்து வாங்கி வந்த, வாழைக் கட்டைகளில் இருந்து இந்த நோய் பரவி இருப்பதாக தெரிகிறது. இந்த நோய் தாக்கினால் வாழைக் குலைகள் சிறுத்து விடும். மகசூல் பாதிக்கும்.

நோய் மேற்கொண்டு பரவாமல் இருக்க, விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கி இருக்கிறோம். நோய் காணப்படும் கட்டைகளை அகற்றி எரித்து விடுமாறு கூறியிருக்கிறோம்.

வாழைக்குப் பாய்ச்சப்படும் தண்ணீர் மூலமாகவும் இந்த நோய் பரவக்கூடும். எனவே நோய் தாக்குதலுக்கு உள்ளான வாழை உள்ள வயலில் இருந்து, மற்றொரு வயலுக்கு தண்ணீர் செல்லாதவாறு பார்த்துக் கொள்ளச் சொல்லி இருக்கிறோம்.÷இதற்கான நோய்த் தடுப்பு மருந்துகள் இரு நாள்களில் அறிவிக்கப்படும் என்றார் துணை இயக்குநர்.

**நடைபாதை வியாபாரிகளை வாழ்விக்கும் தர்ப்பூசணி: விவசாயிகளிடம் இருந்து நேரடி கொள்முதல்**

First Published : 06 Mar 2010 12:00:00 AM IST



காஞ்சிபுரம், மார்ச் 4: காஞ்சிபுரத்தில் கோடை நெருங்குவதைத் தொடர்ந்து தர்ப்பூசணி வியாபாரம் மும்முரமாக நடைபெற்று வருகிறது. பெரும்பாலும் நடைபாதை வியாபாரிகள் பலர் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக இப் பழங்களை கொள்முதல் செய்து இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

காஞ்சிபுரம் பகுதியில் கோடையை முன்னிட்டு பல்வேறு இடங்களில் தர்ப்பூசணி வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. காஞ்சிபுரம் பகுதியில் நிறைய பேர் தர்ப்பூசணியை விரும்பி சாப்பிடுவதால் தங்களுக்கு கூடுதல் வருமானம் கிடைப்பதாக தர்ப்பூசணி வியாபாரிகள் பலர் தெரிவிக்கின்றனர்.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வியாபாரிகள் பலர் ஒரு டன் ரூ.4,800 விலையில் வந்தவாசி அருகே உள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகளிடம் நேரடியாக வாங்கி வருகின்றனர். ஒரு தர்ப்பூசணி பழம் எத்தனை கிலோ எடை வருகிறதோ அதற்கு தகுந்தாற்போல் ஒரு கிலோ ரூ.7 விலையில் விற்கின்றனர். இவர்கள் ஒரு டன் விற்றால் ரூ.2,200 வரை லாபம்

கிடைக்கும். இவர்கள் ஏற்றுக் கூலி, லாரி வாடகை போக ஒரு டன் விற்று முடிக்கும்போது இவர்களுக்கு ரூ.700 முதல் ரூ.800 வரை லாபம் கிடைக்கும். மூன்று அல்லது நான்கு நாளில் தாங்கள் ஒரு டன் விற்பதாகவும் வியாபாரிகள் கூறுகின்றனர். தங்கள் வழக்கமான வருமானத்துடன் இவர்களுக்கு தர்ப்பூசணியால் கூடுதல் வருமானம் கிடைக்கிறது.
காஞ்சிபுரம் - வந்தவாசி சாலையில் டீக் கடை வைத்திருக்கும் உசேன் தற்போது
கூடுதலாக தர்ப்பூசணி வியாபாரமும் செய்து வருகிறார். கோடையை முன்னிட்டு இப் பழங்கள் அதிகம் விற்பனையாவதால் தற்போது தர்ப்பூசணி வியாபாரத்தையும் கூடுதலாக தொடங்கியுள்ளோம்.
வந்தவாசியும், உத்தரமேரூர், வாலாஜாபாத் போன்ற பகுதிகளில் இருந்தும் நாங்களே விவசாயிகள் நேரடியாக தேடிச் சென்று இப் பழங்களை வாங்கி வருகிறோம். இதனால் விவசாயிகளுக்கும், எங்களுக்கும் கூடுதல் லாபம் கிடைக்கிறது என்றார்.

தினமலர்

### உரம் வாங்கும் விவசாயிகள் உஷார் ரசீது பெற வேளாண்துறை அறிவுரை

கோவை : உரம் வாங்கும் போது விற்பனை ரசீது தர மறுத்தாலோ, அதிக விலைக்கு விற்பனை செய்தாலோ, விற்பனையாளர் மீது விவசாயிகள் புகார் தரலாம் என, வேளாண் துறை தெரிவித்துள்ளது.கோவை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அலுவலகம் அறிக்கை:கோவை மாவட்டத்தில் விவசாய உரம் தற்போது போதிய அளவில் கையிருப்பில் உள்ளது. அனைத்து வட்டாரங்களிலும் தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் தேவைக்கும் அதிகமாகவே உரம் இருப்பு வைக்கப்பட் டுள்ளது.கடந்த 1ம் தேதி நிலவரப்படி, தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் 3,450 மெட்ரிக் டன் யூரியாவும், 450 மெட்ரிக் டன் டி.ஏ.பி., உரமும், 3,450 மெட்ரிக் டன் பொட்டாஷ் உரமும், 250 மெட்ரிக் டன் சூப்பர் பாஸ்பேட் உரமும், 3,525 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரமும் இருப்பு உள்ளது.எனவே, விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரத்தை தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் பெறலாம். உரம் வாங்கும்போது விற்பனை ரசீதை, விற்பனையாளரிடம் தவறாமல் பெற்றுக்கொள்ள வேண்டும். விற்பனை ரசீது கொடுக்க மறுத்தால் அல்லது அரசு நிர்ணயம் செய்துள்ள அதிகபட்ச விற்பனை விலைக்கும் அதிகமான விலையில்  உரம் விற்றால் 0422- 243 2739 என்ற டெலிபோன் எண்ணில் புகார் செய்யலாம்.இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

### புதிய அரிசி வரத்தால் ஈரோட்டில் பழைய அரிசி விலை மாற்றமில்லை

ஈரோடு: "புதிய ரக அரிசி வரத்தாவதால், இன்னும் ஓரிரு மாதத்துக்கு பழைய ரக அரிசி விலை குறைய வாய்ப்பில்லை' என, ஈரோடு அரிசி வியாபாரிகள் கூறினர். ஈரோடு மாவட்டத்தில் சென்றாண்டு நெல் சாகுபடி அறுவடை தற்போது நடந்து வருகிறது. ஏ.டி.டி-43, ஏ.டி.டி-36, ஏ.எஸ்.டி.16 (இட்லி அரிசி) ரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெல்லை அரிசியாக மாற்றி, ஈரோடு மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள சந்தைகளுக்கும், ஆலைகளுக்கும் விற்பனைக்காக விவசாயிகள் கொடுக்கின்றனர். ஈரோடு வீரப்பன்சத்திரத்தில் நடப்பு வாரம் கூடிய அரிசி சந்தைக்கு புதிய அரிசி வரத்து அதிகரித்துள்ளது.

ஈரோடு அரிசி வியாபாரி ஒருவர் கூறியதாவது:ஆண்டுதோறும் ஜனவரி மாதம் கடைசியில் மார்க்கெட்டுக்கு புதிய ரக அரிசி வரத்துவங்கும். தற்போது புதிய ரக அரிசி அதிகம் வரத்தாவதால், பழைய ரக அரிசி விலை குறைய வாய்ப்பில்லை. இன்னும் ஓரிரு மாதங்கள் விலையில் இதே நிலைமை நீடிக்கும்.நேற்றைய நிலவரப்படி அரிசி விலை நிலவரம் (75 கிலோ) வருமாறு: கர்நாடகா டீலக்ஸ் (பழையது) 2, 600 முதல் 2,700 ரூபாய் வரையும், கர்நாடகா டீலக்ஸ் (புதியது) 2,050 முதல் 2,150 ரூபாய் வரையும், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி (பழையது) 2,300 ரூபாய் முதல் 2,400 ரூபாய் வரையும், தமிழ்நாடு பி.பி.டி., பொன்னி (புதியது) 1,800 முதல் 1,900 ரூபாய் வரையும், அதிசயப்பொன்னி (புதியரகம்) 1,800 முதல் 1,900 ரூபாய் வரையும், கோ-43 ரகம் (புதியது) 1,250 ரூபாய் முதல் 1,300 ரூபாய் வரையும், இட்லி அரிசி (புதியது) 1,400 முதல் 1,450 ரூபாய் வரையும், ஐ.ஆர்.,20 ரகம் (புதியது) 1,300 முதல் 1,400 ரூபாய் வரையும், ஏ.டி.டீ-45 (புதியது) 1,450 முதல் 1,500 ரூபாய் வரையும் விலைபோனது. இவ்வாறு அவர் கூறினார்.

### விவசாயத்தை வியாபாரமாக செய்ய வேண்டும் : துணைவேந்தர் யோசனை

மதுரை : ""விவசாயத்தை வியாபாரமாக செய்ய வேண்டும்,'' என வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி யோசனை தெரிவித்தார்.
மதுரையில் சென்னை தென்னிந்திய தொழில் வர்த்தக சங்கம், மதுரை தொழில் வர்த்தக சங்கம் மற்றும் கோவை வேளாண்மை பல்கலை ஆகியவை சார்பில் வேளாண் உயர்நிலை மாநாடு நேற்று துவங்கியது. இதில் அரசு, தனியார், உரநிறுவனங்களின் 50க்கும் மேற்பட்ட ஸ்டால்களுடன் கண்காட்சியும் நடக்கிறது. துவக்க நிகழ்ச்சியில் கோரமண்டல் நிறுவன துணைத் தலைவர் ரவிபிரசாத் தலைமை வகித்தார். வேளாண் விற்பனை குழுவாரிய தலைவர் கணேசன், தொழில் வர்த்தக சங்க முன்னாள் தலைவர் நீதிமோகன், செயலாளர் ராஜ்மோகன் உட்பட பலர் பேசினர்.
வேளாண்மை பல்கலை துணைவேந்தர் பி.முருகேசபூபதி பேசியதாவது: இந்தியாவில் தற்போது 114 கோடி பேருக்கு 234 மில்லியன் டன் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. மக்கள் தொகை பெருக்கம் 1.6 சதவீதமாக இருந்தாலும், உணவு உற்பத்தி 2.2 சதவீதமாக உள்ளது. தொழில் நுட்பத்தால் தன்னிறைவு பெற்றுள்ளோம். கோவை வேளாண்மை பல்கலை 746 புதிய தொழில்நுட்பங்கள், 146 பண்ணை கருவிகளை கண்டுபிடித்துள்ளது. அவற்றை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க முடியவில்லை.

விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி குறித்து அறிந்து கொள்ள வேண்டும். இந்தாண்டு 20 லட்சம் எக்டேரில்தான் நெல் சாகுபடி நடந்துள்ளது. இருந்தும் செம்மை நெல் சாகுபடியால், கடந்த ஆண்டைவிட அதிகமாக, 100 லட்சம் மெட்ரிக்., டன் வரை உற்பத்தி இருக்கும் என எதிர்பார்க்கிறோம். அடுத்து துல்லிய பண்ணைத் திட்டத்தை அதிகமாக பயன்படுத்த வேண்டும். விவசாய பணிகளுக்கு கூலியாட்கள் கிடைக்கவில்லை. நம் விவசாயத்தை இயந்திரமயமாக்க, உழுதல், விதைத்தல், பாத்திகட்டுதல் போன்ற பணிகளுக்கு 146 பண்ணை கருவிகளை விவசாய பல்கலை கண்டுபிடித்தது. அடுத்து உணவு பொருட்களை மதிப்பு கூட்டுப் பொருளாக விற்பனை செய்ய வேண்டும். விவசாயத்தில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. முன்பெல்லாம் முக்கிய தொழிலாக விவசாயம் இருந்தது. இன்று தகவல் தொழில்நுட்பம், கம்ப்யூட்டர் என பெருகிவிட்டது. நாம் விவசாயத்தை வியாபாரமாக செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

### பெரம்பலூரில் நெல்கொள்முதல் நிலையம் திறப்பு

பெரம்பலூர் : பெரம்பலூர் துறைமங்கலத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் புதிய நெல்கொள்முதல் நிலையத்தை மாவட்டகலெக்டர் விஜயகுமார் நேற்று திறந்து வைத்தார்.
மாவட்ட கலெக்டர் உத்தரவின்படி கடந்த மாதம் அரும்பாவூரில் நேரடி நெல்கொள்முதல் திறக்கப்பட்டு கொள்முதல் பணி நடந்து வருகிறது. இதுவரை இம்மையத்தில் 71 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூரில் சமீபத்தில் நடந்த விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டத்தில் பெரம்பலூர், வி.களத்தூர்,ஒகலூர் ஆகிய இடங்களில் நேரடி

நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதன்படி பெரம்பலூர் துறைமங்கலத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள நெல்கொள்முதல் நிலையத்தை நேற்று(5ம்தேதி) மாவட்ட கலெக்டர் விஜயகுமார் திறந்து வைத்தார்.
பின்னர் அவர் பேசுகையில், விவசாயிகள் கோரிக்கையினை ஏற்று அரும்பாவூர், பெரம்பலூர் ஆகிய பகுதிகளில் நேரடி நெல்கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. விரைவில் வி.களத்தூர் மற்றும் ஒகளூரில் நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும். நெல்கொள்முதல் மையங்களில் ஏ ரகத்திற்கு ரூ.11ஆயிரமும், பொதுரகத்திற்கு ரூ.10 ஆயிரத்து 500ம் ஒரு டன்னுக்கு அரசு விலை நிர்ணயித்துள்ளது. இதன்படி நெல்கொள்முதல் செய்யப்படும். எனவே மாவட்ட விவசாயிகள் தாங்கள் உற்பத்திசெய்யும் நெல்களை இடைத்தரகர்களிடம் விற்பனை செய்யாமல் நேரடியாக நெல்கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறவேண்டும் என்றார்.
விழாவில் டிஆர்ஓ பழனிச்சாமி, நுகர் பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் வில்லியம்தாமஸ், ஆர்டிஓ பாலுசாமி, பிஆர்ஓ கண்ணதாசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### தேங்காய் விளைச்சல், விலை குறைவால் விவசாயிகள் கவலை : காற்று வாயிலாக தாக்கிய கருப்பு நோயால் பாதிப்பு

ராமநாதபுரம் : மாவட்டத்தில் தேங்காய் விளைச்சல் குறைந்த நிலையில், கொப்பறை விலையும் சரிந்துள்ளதால், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
வறட்சிக்கு பெயர் போன ராமநாதபுரத்தில், தென்னை விவசாயம் சக்கை போடு போட்டதை பலரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஏதோ 50 ஆண்டுகளுக்கு முன்பு என நினைத்துவிட வேண்டாம். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை இங்கு தென்னை விவசாயம் நல்ல முறையில் கைகொடுத்துள்ளது. குறிப்பாக காஞ்சிரங்குடி, தினைக்குளம், கைக்கூலிமடம், லட்சுமிபுரம், திருப்புல்லாணி, சேதுக்கரை, பெரியபட்டினம், ரெகுநாதபுரம், களிமண்குண்டு பகுதிகளில் தென்னை விவசாயம் சிறப்பாக நடந்து வந்தது. திடீரென காற்றில் பரவிய நோயால், தேங்காய்களில் கருப்பு (நோய்) தாக்கியது. தோற்றத்தால் விலையை இழந்த நிலையில், அதன் தாக்கம் இன்று வரை தீரவில்லை. இந்நிலையில், இம்முறை தென்னை விளைச்சல் கடுமையாக குறைந்துள்ளது. வழக்கத்துக்கு மாறாக குறைந்த அளவே விளைச்சல் உள்ளது .

இது போதாதென்று விலையும் குறைந்துள்ளது. கொப்பறை விலை வீழ்ச்சியை தொடர்ந்து இந்த விலை குறைப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேங்காய் ஒன்று, இரண்டு ரூபாய் 10 காசுக்கு வியாபாரியிடம் விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு கூடுதலாக 10 காசு கிடைத்தது குறிப்பிடதக்கதாகும். விளைச்சலும் குறைந்த நிலையில், விலையும் கைவிரித்ததால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர். கூலி, பராமரிப்பு, கண்காணிப்பு என பல்வேறு செலவுகளையும் மீறி, தென்னையின் இந்த நிலை, விவசாயிகளுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தி உள்ளது.
இதோ விவசாயிகள் குமுறல்கள் சில:
சுல்தான் முகமது இப்ராஹிம்(கீழக்கரை): இம்முறை குறைந்த அளவே தேங்காய் கிடைத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் காற்றில் பரவிய நோயால், இன்று வரை அதிலிருந்து எங்களால் மீண்டு வர முடியவில்லை.
ரவி(பஞ்சம்தாங்கி): தென்னை விவசாய கூலியாக இருந்து வருகிறேன். முன்பு போல காய்கள் இருப்பதில்லை. பராமரிப்பு, உரம், எங்களது கூலிக்கு பின், உரிமையாளருக்கு பெரிய அளவில் லாபம் இல்லை.
தமிழரசி(காஞ்சிரங்குடி): கொப் பறை விலை குறைந்துள்ளதால், தேங்காய் விலையும் சரிந் துள்ளது. கடைகளில் கூடுதலாக விற்கப்பட்டாலும், எங்களிடம் கொள்முதல் செய்யப்படுவது இரண்டு ரூபாய்க்கு தான்,என்றார்.

### நெல் பயிரில் படைப்புழு தாக்குதலைகட்டுப்படுத்தும் வழிமுறை

ஆறுமுகநேரி:ஆறுமுகநேரி, மூலக்கரை, நத்தக்குளம் பகுதியில் நெல்பயிரில் படைப்புழு தாக்குதல் அதிகமாக இருப்பதால் அதனை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார்.இது குறித்து திருச்செந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணன் தெரிவித்துள்ளதாவது-ஆறுமுகநேரி, மூலக்கரை, நத்தக்குளம் பகுதியில் உள்ள நெல்பயிரில் படைப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. படைப்புழுவானது கோடை மழைக்கு பின் பாதிப்பு அதிகமாக காணப்படும். நெல் பயிரில் அடிப்பகுதியில் படைப்புழு படை படையாய் காணப்படும். இரவு நேரத்தில் சேதம் விளைவிக்கும் பாதிக்கப்பட்ட வயல் பார்த்தால் ஆடு, மாடு மேய்த்தது போன்று இருக்கும். பயிரின் மையப்பகுதியிலிருந்து கொண்டு தோகைகளையும், கதிர்களையும் வெட்டி சேதம் விளைவிக்கும். படைப்புழுவை கட்டுப்படுத்திட ஏக்கருக்கு குளோர் பைரிபாஸ் 500மி.லி அல்லது கார்பரில் 50 சதவீதம் 400 கிராம் அல்லது கார்பரில் 10 சதவீத தூள் 10 கிலோ ஏதாவது ஒரு மருந்தினை உபயோகப்படுத்திட வேண்டும். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

### வேளாண் திட்ட பணி ஆணையர் ஆய்வு

திருச்சி : தமிழக வேளாண்மை ஆணையர் கோசலராமன் தொட்டியம் வட்டார வேளாண் திட்ட பணிகள் மற்றும் விரிவாக்க மைய பணிகளை ஆய்வு செய்தார்.

தொட்டியம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் உழவர்களுக்கு 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்க உள்ள 128 டன் ஜிப்சம், உழவர் ஆர்வலர் குழுவினர் மூலம் செயல்படுத்தப்படும் செம்மை நெல் சாகுபடிக்கு ரூ. 7 ஆயிரத்து 400 மதிப்புள்ள 5 கோனோவீடர் மற்றும் ஒரு மார்க்கர் வீதம் 10 குழுக்களுக்கு விநியோகம் செய்யப்பட உள்ளதையும் பார்வையிட்டார்.

ஏலூர்பட்டி அருகே அழியாபுரம் கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் நடவு செய்யப்பட்டுள்ள வீரிய ஒட்டு நெல் விதைப் பண்ணையை ஆய்வு செய்தார். ஆய்வின் போது திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பொன்னுசாமி, துணை வேளாண்மை இயக்குநர் (மாநில திட்டம்) ராம்குமார், துணை வேளாண்மை இயக்குநர் (மத்திய திட்டம்) சிவராஜ், தொட்டியம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன் மற்றும் திருவெறும்பூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரவி ஆகியோர் உடனிருந்தனர்.

### விதை கிராம திட்டபயிற்சி முகாம்கள்

தென்காசி:வாசுதேவநல்லூர் வட்டாரம் புளியங்குடி, துரைச்சாமியாபுரம், வடக்குசத்திரம் பகுதிகளில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம்கள் நடந்தன.வாசுதேவநல்லூர் வட்டார வேளாண் துறை சார்பில் புளியங்குடியில் விதை கிராம திட்ட பயிற்சியின் கீழ் எண்ணெய்வித்து விதை உற்பத்திகான இரண்டாம் கட்ட பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் தலைமை வகித்து பேசும் போது, எண்ணெய் வித்து விதை உற்பத்தியின் அவசியம், நோக்கம் பற்றி கூறினார். விவசாயிகள் சேவா சங்க தலைவர் யூனுஸ் முன்னிலை வகித்தார்.

வேளாண்மை அலுவலர் ராமசாமி வரவேற்றார்.புளியங்குடி விதை சான்று அலுவலர் வீரபுத்திரன் விதை பண்ணை அமைத்தல், விதை சான்றளிப்பு நடைமுறைகள் பற்றி விளக்கினார். பாலு என்பவரது எள் வயலுக்கு விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டு எள் வயலில் விதை பண்ணை அமைக்கப்பட்டுள்ள முறை பற்றி விளக்கப்பட்டது. துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் வேளாண் துறையின் திட்டங்கள் பற்றி விளக்கினார்.புளியங்குடி உதவி வேளாண்மை அலுவலர் சுபாஷ் சந்திரபோஸ் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி விதை அலுவலர் முருகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லையா, ஆறுமுகம், அண்ணாதுரை, சம்சுதீன் செய்திருந்தனர்.

* துரைச்சாமியாபுரத்தில் நடந்த சிறுதானியம் விதை உற்பத்திக்கான விதை கிராம திட்ட பயிற்சி முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் தலைமை வகித்து சிறுதானியங்கள் விதைகளின் முக்கியத்துவம் பற்றி பேசினார். முன்னோடி விவசாயி பழனிச்சாமி முன்னிலை வகித்தார். உதவி வேளாண்மை அலுவலர் பால்ராஜ் வரவேற்றார். துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் விதை நேர்த்தி, உயிர் உரம் நேர்த்தி, தொழு உரமிடல், அடியுரமிடல், மேலுரமிடல், விதைப்பு பற்றிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் செல்லையா வேளாண்துறையின் மானிய திட்டங்கள் பற்றி கூறினார். பால்ராஜ் நன்றி கூறினார்.

* வடக்குசத்திரத்தில் நடந்த நெல் விதை உற்பத்தி குறித்த பயிற்சி முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் தலைமை வகித்து நெல் விதை அறுவடை செய்த பின்னர் உள்ள விதை சான்று நடைமுறைகளை பற்றி விளக்கினார். சிவகிரி டவுன் பஞ்.,கவுன்சிலர் குருசாமி முன்னிலை வகித்தார். புளியங்குடி ஆர்.பி.எம்.விதை சுத்திகரிப்பு நிலையத்தில் தரமான விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

நிலைய உரிமையாளர் இசக்கிமுத்து வரவேற்றார். விதை சான்று அலுவலர் வீரபுத்திரன் விதை சுத்திகரிப்பு குறித்து பேசினார்.துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன் புதிய சாக்குகளில் விதை சேகரம், விதை பாதுகாப்பு, விதை சேமிப்பு முறைகள் பற்றி விளக்கினார். உதவி விதை அலுவலர் முருகன் சான்றட்டைகள் வாங்குதல், உற்பத்தியாளர் அட்டை தயார் செய்தல், சிப்பமிடுதல் பற்றி பயிற்சி அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் செல்லையா நன்றி கூறினார்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சம்சுதீன், ஆறுமுகம், அண்ணாதுரை, சுபாஷ் சந்திரபோஸ் செய்திருந்தனர்.

**விவசாயிகள் - வியாபாரிகள் கருத்தரங்கு கூட்டம்**

திருநெல்வேலி:முனைஞ்சிப்பட்டியில் விவசாயிகள் - வியாபாரிகள் கருத்தரங்கு கூட்டம் நடந்தது.தமிழ்நாடு நீர்வள திட்டத்தின் கீழ் கருமேனியாறு உபவடிநில பகுதி முனைஞ்சிப்பட்டி, கூந்தகுளம், பிள்ளையார்குளம், ராமகிருஷ்ணபுரம், கோடகன்குளம் மற்றும் சுற்றுப்புற விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கலந்துரையாடல் கருத்தரங்கு நடந்தது.முனைஞ்சிப்பட்டி பஞ்.,துவக்கப்பள்ளி வளாகத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு பஞ்.,தலைவர் சரோஜா தலைமை வகித்தார். நெல்லை வேளாண் வணிகத்துறை இயக்குநர் தங்கசாமி பாண்டியன் முன்னிலை வகித்தார். ஏற்பாடுகளை ஆலங்குளம் வேளாண் அலுவலர் (வேளாண் வணிகம்) லக்குமணன், உதவி வேளாண்மை அலுவலர் ஜபருல்லா செய்திருந்தனர்.

**கொப்பரை கொள்முதல் மீண்டும் துவங்கியாச்சு!**

பல்லடம் : தெற்குபாளையம் சேமிப்பு கிடங்குகளில் இருந்த கொப்பரை மூட்டைகள் டெண்டர் விடப்பட்டன. இதையடுத்து, இட வசதி ஏற்பட்டதால் ஏழு நாட்களுக்கு பின் நேற்று பல்லடம், செஞ்சேரியில் உள்ள அரசு கொப்பரை மையங்களில் கொள்முதல் மீண்டும் துவங்கியது. பல்லடம், செஞ்சேரியில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் மையங்களில் கடந்தாண்டு ஏப்., முதல் விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ கொப்பரை 44.50 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப் படுகிறது.  பல்லடத்தில் புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகளிலும், செஞ்சேரியில் திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக்கிழமைகளிலும் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப் படும் கொப்பரை, தெற்குபாளையம் பிரிவு, அவிநாசி மற்றும் திருப்பூரில் உள்ள அரசு சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு வந்தன. கடந்த மாதம் 25ம் தேதி, மூன்று சேமிப்பு கிடங்குகளும் கொப்பரை இருப்பு மூட்டைகளால் நிரம்பியதால், பல்லடம், செஞ்சேரி மையங்களில் கொள்முதல் செய்யப்படும் கொப்பரைகளை இருப்பு வைக்க, இட வசதி கிடைக்கவில்லை.இதனால், பல்லடம், செஞ்சேரி கொள்முதல் மையத்தில் கடந்த 26ம்தேதி முதல்

தற்காலிகமாக கொப்பரை கொள்முதல் நிறுத்தப்பட்டது. இதையடுத்து, "நேபட்' நிறுவனம், தெற்கு பாளையம் சேமிப்பு கிடங்கில் இருந்த கொப்பரை களை டெண்டர் விட்டது. இதன்காரணமாக, தெற்குபாளையம் கிடங்கில் கொப்பரை இருப்பு வைக்க, தற்போது குறிப்பிட்ட அளவுக்கு இட வசதி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, பல்லடம், செஞ்சேரியில் உள்ள கொள்முதல் மையங்களில், விவசாயிகளிடம் இருந்து நேற்று கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டது. ஏழு நாட்களுக்கு பின், கொப்பரை கொள்முதல் துவங்கியுள்ளது. ""கடந்த 11 மாதங்களில் இவ்விரு மையங்களில், விவசாயிகளிடம் இருந்து 25 கோடியே 77 லட்சம் ரூபாய்க்கு 5,792.800 டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது," என, பல்லடம் கொள்முதல் நிலைய அலுவலக செயலர் சுப்புலட்சுமி தெரிவித்தார்.

### *கேரளாவில் தென்னை மரங்களுக்கு காப்பீடு திட்டம் 31–ந்தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும்*

---

*பெரும்பாவூர்,மார்ச்.6–*
*கேரளாவில் தென்னை மரங்களுக்கு காப்பீடு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. இதில் தென்னை மரத்திற்கு காப்பீடு செய்ய விருப்பம் உள்ளவர்கள் 31–ந்தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.*

*தென்னை மரத்திற்கு காப்பீடு*

*இந்திய மாநிலங்களை பொறுத்தவரை கேரளாவில் தான் தென்னை மரங்கள் அதிகமாக உள்ளன. இங்கு இருந்து தேங்காய்கள் மற்றும் தேங்காய் எண்ணை உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கேரளாவில் அனைத்து வீடுகளிலும் தென்னை மரங்கள் உள்ளன.*

*தென்னை மரங்கள் பலத்த மழை, இடி போன்ற இயற்கை சீற்றத்தின் போது அழிந்து விடுகின்றன. இதனால் அதன் உரிமையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே தென்னை மரங்களுக்கு காப்பீடு திட்டத்தை கொண்டு வர அரசு முடிவு செய்தது. இதற்கு மக்கள் அனைவரும் ஆதரவு தெரிவித்து உள்ளனர். இதன்படி இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.*

*ஒரு மரத்திற்கு ரூ.1.25 செலுத்தலாம்*

*தென்னை மரங்களுக்கு காப்பீடு எடுப்போர் ஆண்டுக்கு ஒரு மரத்திற்கு 1.25 ரூபாய் பிரிமீயம் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் படி அந்த மரம் குறைந்தது ஆண்டுக்கு 30 தேங்காய்களாவது காய்க்க வேண்டும். அதோடு குறைந்த பட்சம் 10 தென்னை மரங்கள் இருந்தால் தான் இந்த காப்பீடு திட்டத்தில் பயன் பெற முடியும். தென்னை மரங்கள் காய்க்க தொடங்கிய உடன் 15 ஆண்டுகள் வரை மரம் ஒன்றுக்கு 4.25 ரூபாயும், 16 ஆண்டு முதல் 60 ஆண்டு வரை வயது உடைய தென்னை மரங்களுக்கு 5.78 ரூபாயும் காப்பீடு தொகை கட்ட வேண்டும். இதில் தென்னை மர உரிமையாளர் 1.25 ரூபாயை கட்டினால் போதுமானது. மீதி தொகையை விவசாய துறை செலுத்தும். இதில் 50 சதவீத மானியத்தை தென்னை வளர்ச்சி வாரியமும், 50 சதவீதம் விவசாயத்துறையும் செலுத்தும்.*

*நஷ்ட ஈடு*

*இதன்படி தீ விபத்துக்கள், இடி, மின்னல் தாக்கி இழப்புகள், வெள்ளப்பெருக்கில் ஏற்படும் சேதங்கள், நோய் தாக்குதல், வறட்சியால் ஏற்படும் பாதிப்புகள், சூறாவளி, பலத்த காற்று போன்றவற்றால் ஏற்படும் இழப்புகளுக்கு 15 ஆண்டுகள் வரை உள்ள தென்னை மரத்திற்கு 600 ரூபாயும், 16 முதல் 60 ஆண்டு வரையுள்ள தென்னை மரத்திற்கு 1150 ரூபாயும் நஷ்ட ஈடாக வழங்கப்படும்.*

*இந்த திட்டத்தில் சேர விரும்புவோர்கள் வருகிற மார்ச் 31–ந்தேதிக்குள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். இத்தகவலை விவசாயத்துறை செயலாளர் தேவேந்திரகுமார், தென்னை வளர்ச்சி வாரிய தலைவர் மினி மாத்யூ ஆகியோர் தெரிவித்து உள்ளனர்.*

### *சர்க்கரை உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புஆலைகளுக்கு குறைந்த வட்டியில் கடன்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நடப்பு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர் – செப்டம்பர்) நாட்டின் சர்க்கரை உற்பத்தி 1.60 கோடி டன்னாக அதிகரிக்கும் என மத்திய வேளாண் அமைச்சர் சரத்பவார் தெரிவித்தார்.*

*கரும்பு சாகுபடி*

*இந்திய வேளாண் ஆராய்ச்சி பயிலகம் சார்பில், டெல்லியில் விவசாயிகளுக்கான 'வேளாண் திருவிழா' நடைபெற்றது. இவ்விழாவில் பேசிய அமைச்சர், "நடப்பு சர்க்கரை பருவத்தில், கர்நாடகா, குஜராத் ஆகிய மாநிலங்களில் அதிக அளவில் கரும்பு சாகுபடியாகி உள்ளது. மேலும், மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசம்*

*ஆகிய மாநிலங்களிலும் கரும்பு உற்பத்தி எதிர்பார்ப்புக்கும் மேல் உள்ளது. எனவே, நடப்பு சர்க்கரை பருவத்தில், 1.60 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும். இருப்பினும், நாட்டில் சர்க்கரைக்கான தேவை ஆண்டுக்கு 2.30 கோடி டன் என்ற அளவில் உள்ளது. எனவே, தேவையை பூர்த்தி செய்து கொள்ள அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது" என்று தெரிவித்தார்.*

*சென்ற சர்க்கரை பருவத்தில், சர்க்கரை உற்பத்தி 1.47 கோடி டன்னாக சரிவடைந்திருந்தது. இதன் காரணமாகவே, கடந்த ஒரு சில மாதங்களாக, உள்நாட்டில் சர்க்கரையின் விலை மிகவும் அதிகரித்தது.*

*நாட்டின் மொத்த கரும்பு உற்பத்தியில், மகாராஷ்டிரா மற்றும் உத்திரபிரதேச மாநிலங்களின் பங்களிப்பு 60 சதவீதமாக உள்ளது. இவ்விரு மாநிலங்களிலும், நடப்பு பருவத்தில், கரும்பு உற்பத்தி மேலும் அதிகரிக்கும் என்ற மதிப்பீடும் உள்ளது. எனவே, தற்போதைய மதிப்பீட்டையும் விஞ்சி கரும்பு சாகுபடியும், சர்க்கரை உற்பத்தியும் அதிகரிக்கும் என சரத்பவார் மேலும் தெரிவித்தார்.*

*உலக அளவில், சர்க்கரை பயன்பாட்டில் இந்தியா முதலிடத்திலும், உற்பத்தியில் இரண்டாவது இடத்திலும் உள்ளது. உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் வகையில், அரசு பிரேசில் நாட்டில் இருந்து அதிக அளவில் சர்க்கரையை இறக்குமதி செய்து வருகிறது. சென்ற சர்க்கரை பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி 1.47 கோடி டன்னாக இருந்தது. இது, அதற்கு முந்தைய பருவத்தை விட 44 சதவீதம் குறைவாகும்.*

*குறைந்த வட்டியில் கடன்*

*இந்த நிலையில், சர்க்கரை ஆலைகளுக்கு, குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்க அரசு ஆலோசித்து வருவதாக மத்திய ராஜாங்க நிதி அமைச்சர் நமோ நாராயண் மீனா வெள்ளிக்கிழமை அன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.*

*இந்த நிலையில், தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு, சர்க்கரை ஆலைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க வேண்டும் என நிதி அமைச்சகத்திற்கு கோரிக்கை அனுப்பியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு, சர்க்கரை ஆலைகளுக்கு வங்கிகள் 9 சதவீத வட்டியில் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. தற்பொழுது, சர்க்கரை ஆலைகளுக்கு 11–14 சதவீத வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்பட்டு வருகிறது.*

*பாரத ரிசர்வ் வங்கியுடன் கலந்தாலோசித்த பின்னர் சர்க்கரை ஆலைகளுக்கு குறைந்த வட்டியில் வங்கி கடன் வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும் என அமைச்சர் மேலும் கூறினார்.*

## கோவை நரசீபுரம் பகுதியில் மஞ்சள் அறுவடையில் விவசாயிகள் மும்முரம் விளைச்சல் குறைவால் வருத்தம்

*கோவை,மார்ச்.6–*

*கோவை நரசீபுரம் பகுதியில் மஞ்சள் அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகிறது.*

*மஞ்சள் அறுவடை*

*கோவையை அடுத்து உள்ள தொண்டாமுத்தூர், நரசீபுரம், தாளியூர் பகுதிகளில் கரும்பு, வாழை, மஞ்சள், வெங்காயம், துவரை போன்ற பயிர்கள் விவசாயம் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு பெரும்பாலான விவசாயிகள் மஞ்சள் பயிரிட்டனர். 10 மாத பயிரான மஞ்சள் கடந்த சில வாரமாக அறுவடை செய்யும் நிலைக்கு வந்து உள்ளது.*

*இதனால் நரசீபுரம் பகுதியில் தற்போது மஞ்சள் அறுவடையை விவசாயிகள் தொடங்கி உள்ளனர். பல ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட மஞ்சள் அறுவடை செய்யப்பட்டு மூட்டைமூட்டையாக கட்டி ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு அனுப்பும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.*

*இதுபற்றி நரசீபுரத்தை சேர்ந்த விவசாயி மணி என்பவர் கூறியதாவது:–*

*விளைச்சல் குறைவு*

*இப்போது மஞ்சள் சீசன் ஆகும். அதனால் எங்கு பார்த்தாலும் மஞ்சள் அறுவடை நடக்கிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அழகல்நோய் காரணமாக மஞ்சள் விளைச்சல் குறைந்து உள்ளது. அதுமட்டுமின்றி புது மண்ணில் மஞ்சள் பயிரிட்டால் எதிர்பார்த்த அளவுக்கு விளைச்சல் இருக்காது. நன்றாக பதமாகி தயார் நிலையில் உள்ள நிலத்தில் மஞ்சள் பயிரிடும்போது அதிக அளவு விளைச்சலை காண முடியும். மண்ணில் இருந்து எடுக்கப்படும் மஞ்சளை நாங்கள் அவித்து அதை காயவைத்து பாலீஷ் போட்டு விரலி மஞ்சளாக மாற்றி அதை ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு கொண்டு சென்று விற்போம். இந்த ஆண்டு மஞ்சள் விளைச்சல் குறைந்ததாலும், தொழிலாளர்களுக்கு கூலி உயர்ந்துவிட்டதாலும் நாங்கள் முதலீடு செய்த பணம் மட்டுமாவது கிடைக்குமா என்பது சந்தேகமாக உள்ளது.*

*100 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை மஞ்சள் பாலீஷ் செய்வதற்கு 20 ரூபாய் செலவாகிறது. அதேபோல் ஒரு ஏக்கர் பரப்பளவுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு ரூ.5 ஆயிரம் செலவு செய்து உள்ளோம். மஞ்சள் ஒரு குவிண்டாலுக்கு ரூ.10 ஆயிரத்துக்கு விற்றால் எங்களுக்கு அசல் மட்டுமே கிடைக்கும். நரசீபுரம் பகுதியில் யானை தொந்தரவும் அதிகமாக இருக்கிறது. அதை வனத்துறை அதிகாரிகள் கட்டுப்படுத்த வேண்டும்.*

*இவ்வாறு அவர் கூறினார்.*